**STC**. 2650 /2023 தேதி - 04.11.2023

**எதிரி ஆஜர்.**

**PW**-2 பாலகிருஷ்ணன் த/பெ.ஸ்ரீராமுலு

சத்திய பிரமாணம் செய்யப்பட்டது. பிரமாண வாக்குமூலத்தில் கண்ட சங்கதிகள் யாவும் உண்மையாகும். அவைகள் நான் வழக்கறிஞரிடம் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டதாகும்.

05.04.2021ம் தேதி புகார்தாரரிடமிருந்து 1ம் எதிரி நிறுவனத்திற்காக 2ம் எதிரி புகார்தாரரிடம் ரூ.10 லட்சத்தை கைமாற்றுக் கடனாக பெற்றுக் கொண்டார். மேற்படி கடனுக்கு ஆதரவாக மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.1.50 வீதம் வட்டி தருவதாக ஒப்புக் கொண்டு ஒரு கடனுறுதிச் சீட்டை மாதவராவ் மகன் ரகுராமன் என்பவர் எழுதினார். அந்த கடனுறுதிச் சீட்டில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன்.

ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/-R.Sujatha
**நீதித்துறை நடுவர், எண்.2,**
**கரூர்.**